8th November 1966]

படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிச்சைக்காரர் தடுப்புச் சட்டத்தினால் பயன் விளையாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிச்சைக்காரர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்தால் கொண்டுபோய் வைப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் என்ன பிரயோஜனம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்தால் அவர்களுக்காக ஏற்படுத்தி நடத்தப்படும் விடுதிகள் அரசாங்கத் துறையிலே நடத்தப்படுபவை அல்ல. தனிப்பட்டவர்களால்தான் நடத்தப்படுகின்றன. அவர்களை அந்த விடுதிகளிலே கொண்டு வைப்பது கஷ்டமாக இருக்கிறது. பிச்சையெடுக்கின்ற நிலைமையே நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்குத்தான் இந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் படித்தான் பாட்டுப் பாடிப் பிச்சையெடுத்தாலும், ஆட்டம் ஆடிப் பிச்சையெடுத்தாலும் எந்தவிதமாகப் பிச்சையெடுத்தாலும் அவர்களை அவ்வப்போது பிடித்துத் தண்டிக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு

* 526 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1964–65-ம் ஆண்டில் குடும்ப கட்டுப்பாடு (அறுவை) செய்துக் கொண்டவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள்?

(இ) அவர்களில் இந்துக்கள் எத்தனை பேர்கள்?

(உ) முஸ்லீம்கள் எத்தனை பேர்கள்?

(எ) முனிசிபல் நகரங்களில் எத்தனை பேர்கள் விவரமாக?

(ஐ) கிராமப்புறங்களில் எத்தனை பேர்கள்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) A statement is placed on the table of the House.

(*b*) & (*c*) These particulars are not collected at the time of operation.

(*d*) 10,842.

(*e*) 19,800.

திரு. எம். எஸ். மணி: சார், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களிலே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அறியலாமா?

கனம் சபாநாயகர்: அது எல்லாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டிய விஷயம், வெளியிலே சொல்லலாமா? அறுபது வயதிற்கு மேல் செய்துகொண்டவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள்.

---

* Printed as Appendix X on page 729-730.

[8th November 1966

நகரசபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*527 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் சிப்பந்திகளுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம் சர்க்காரிடமிருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அரசாங்க சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் பென்ஷன் போன்ற சலுகைகள் நகராட்சி சிப்பந்திகளுக்கும் வழங்க நகராட்சியிலே எந்த வகுப்பு உத்தியோகங்களையும் சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளது (நகராட்சியிலுள்ள கமிஷனர், என்ஜினியர், சுகாதார அதிகாரி ஆகியோர் ஏற்கெனவே சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில உத்தியோகங்களை சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளது). இதற்காக 1920-ம் வருடத்திய நகராட்சி சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யவும் முடிவு செய்துள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏற்கனவே சர்க்கார் சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நகரசபை சிப்பந்திகளைத் தவிர வேறு என்ன என்ன சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக்க உத்தேசம் இருக்கிறது? இதன் காரணமாக அரசாங்கத்தின் பொருளாதாரப் பொறுப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பரிசீலனை செய்திருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மானேஜருக்கு மேற்பட்ட அதிகாரிகளை சர்க்கார் அதிகாரிகளாக ஏற்றுக்கொள்ள உத்தேசித்து திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பப்ளிக் ஒபினியனுக்காகச் சென்றிருக்கிறது. அது வந்தபிறகு அதைப் பரிசீலனை செய்யும்பொழுது கனம் அங்கத்தினர் கூறுவதையும் கருத்தில் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன்: நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றில் பணிபுரிகின்ற கீழ்த்தர சிப்பந்திகளிடமிருந்து பிராவிடன்ட் ஃபண்ட் பிடிக்கிறார்கள். ஆனால், கணக்குச் சரியாக வைக்கப்படவில்லை. அவர்கள் இறந்த பிறகு அல்லது அவர்களுடைய மனைவிமார்கள் இறந்த பிறகுதான் பணம் கிடைக்கும்போல் தெரிகிறது. காரணம் என்னவென்றால் ஆடிட் செய்யவேண்டும், ஸ்பெஷல் ஆடிட் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கின்ற முறையைக் கொண்டுவர முன்வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்தக் கேள்வி நகராட்சி சிப்பந்திகளுக்குப் பென்ஷன் வழங்குவதைப்பற்றிய கேள்வி. தனிக்கேள்வி போடலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், பட்ஜெட் கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே நகராட்சியிலே பணியாற்றுகின்ற கீழ்த்தர பணியாளர்களுக்கு, பியூன் போன்ற

ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் யோசனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு ஏற்கனவே பதில் அளித்தேன். அதற்குமேல் விவரம் என்னிடம் இல்லை.

மூக்குப்பீறி பஞ்சாயத்து

* 528 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மூக்குப்பீறி பஞ்சாயத்துத் தலைவர் 1965-66-ம் வருடங்களில், அகாரணமாய் இரண்டு பஞ்சாயத்து மெம்பர்களை பதவியினின்றும் நீக்கியதன் மூலம் பதவியை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற புகார் ஜில்லா கலெக்டருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மூக்குபீறி பஞ்சாயத்து தலைவர் வேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகளையும், விதிகளையும் நிறைவேற்ற மறுப்பதால், அவரைப் பதவியினின்று நீக்குவதற்கு காரணம் காண்பிக்க சென்னை பஞ்சாயத்து சட்டம் 150-ஆவது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், புதிய சட்டப் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தவறுசெய்துவிட்டார் என்று அறிந்த பிற்பாடும்கூட அந்தப் பஞ்சாயத்துக்கு அந்தத் தகவலை அனுப்பி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய பெருவாரியான ஓட்டுக்களைப் பெற்றுத்தான் அவரை நீக்கமுடியும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Property tax

* 529 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to defer the quinquennial revision of property tax in all Municipalities in the State, with effect from April 1966; and

(b) if so, the reasons therefor?